வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu






மாருதி
Money Exchange (Pvt) Ltd.

இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086

இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443

MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை



Email : eelanaduweekly@gmail.com   மலர் : 07   24.02.2026 செவ்வாய்க்கிழமை   இதழ் : 50   பக்கங்கள் : 08


## யாழ். பல்கலைக்கழகத்தில்
# சுதந்திர தினத்தன்று கறுப்புக் கொடி; ஆதாரத்தின் அடிப்படையில் நடவடிக்கை!

### மானியங்கள் ஆணைக்குழு வட்டாரங்கள் தகவல்

கொழும்பு, பெப்ரவரி.24

**இலங்கையின் சுதந்திர தினமான பெப்ரவரி 4ஆம் திகதி, யாழ். பல்கலைக்கழகத்தில் ஏற்றப்பட்டிருந்த சிங்கக் கொடியை இறக்கி - அதற்குப் பதிலாகக் கறுப்புக் கொடி ஏற்றப்பட்ட சம்பவம் தொடர்பில் பல்கலைக்கழகத்தில் இருந்து கிடைக்கப்பெற்றுள்ள அறிக்கைகள், ஆதாரங்கள் மற்றும் புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து முடிவெடுக்கப்படவுள்ளதாகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வட்டாரங்களில் இருந்து அறியவருகிறது.**

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது-

கடந்த 2025 ஆம் ஆண்டும் இதே போல ஏற்றப்பட்டிருந்த சிங்கக் கொடியை இறக்கி - அதற்குப் பதிலாகக் கறுப்புக் கொடி ஏற்றப்பட்ட சம்பவம் இடம்பெற்றதைத் தொடர்ந்து, அந்தத் தேச விரோதச் செயலில் ஈடுபட்டவர்கள் பற்றிய விவரங்களைப் புகைப்பட ஆதாரங்களுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்திருந்த போதிலும் பல்கலைக்கழகம் எந்தவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்றும், அதே போல இவ்வருடமும் அதே சம்பவம் இடம்பெற்றிருப்பதனால், பல்கலைக்கழகம் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் மீது என்ன நடவடிக்கைகளை எடுத்தது? எதிர்காலத்தில் இவ்வாறான

07

## மாகாண சபைத் தேர்தலை பழைய முறையில் நடத்துக!

### விசேட குழுவிடம் எதிர்க்கட்சி யோசனை முன்வைக்க தீர்மானம்

கொழும்பு, பெப். 24

மாகாண சபைத் தேர்தலை பழைய முறையிலேயே மிக விரைவாக நடத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு கோரி, பாராளுமன்ற விசேட குழுவிடம் யோசனை ஒன்றை முன்வைக்க எதிர்க்கட்சி தீர்மானித்துள்ளது.

பாராளுமன்றத்தில் ஒரு சிறிய திருத்தத்தை எளிய பெரும்பான்மையுடன் நிறைவேற்றுவதன் மூலம், பழைய முறையில் தேர்தலை நடத்த முடியும். தேர்தலை விரைவுபடுத்த இதுவே சிறந்த வழி என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார குறிப்பிட்டார்.

இந்த ஆண்டு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் பாதீட்டில் இருந்து நிதி ஒதுக்கியுள்ளதாக அறிவித்துள்ளது என்றும், இந்த நேரத்தில் இதை அரசாங்கத்திற்கு நினைவூட்டுவதாகவும் அவர் கூறினார்.

மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துவதற்கு அரசாங்கத்திற்கு உண்மையான விருப்பம் இருந்தால், அதை மிக விரைவாக நடத்த முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

07

## இளவாலையில் உரப் பையில் மோட்டார் குண்டு!



யாழ்ப்பாணம், பெப். 24

இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முள்ளானை பகுதியில் நேற்று மோட்டார் குண்டு ஒன்று இனங் காணப்பட்டுள்ளது.

உரப்பையில் போட்டு, பற்றைப் பகுதியில் குறித்த மோட்டார் குண்டு வைக்கப் பட்டிருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது.

நீதிமன்ற உத்தரவை பெற்ற பின் குறித்த குண்டை மீட்பதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-05)

## யாழில் ஜனாதிபதியின் நிகழ்வுக்கு மக்களை அழைத்துவர ரூ.25 இலட்சத்திற்கு மேல் செலவு

யாழ்ப்பாணம், பெப். 24

யாழ்ப்பாணத்தில் கடந்த மாதம் ஜனாதிபதி கலந்து கொண்ட நிகழ்வுகளுக்கு பொது மக்களை அழைத்து வர பேருந்துகளுக்கு யாழ்.மாவட்ட செயலகத்தினால் 25 இலட்சத்து 66 ஆயிரத்து 885 ரூபாய் நிதி செலவழிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட செயலகம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்திற்கு கடந்த மாதம் விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஜனவரி மாதம் 16ஆம் திகதி மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலை மைதானத்தில் நடைபெற்ற இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கான மீள்குடியேற்ற வீடமைப்பு திட்டத்திற்கான உதவி வழங்கும் நிகழ்வில் பங்கேற்றார்.

இந்நிகழ்வில் கலந்து கொள்வதற்காக பொது மக்களை மைதானத்திற்கு அழைத்து வருவதற்காக 11 தனியார் பேருந்துகளை சேவைக்கு

07

## பௌத்த பிக்குகள் மீதான அவதூறுகளை நிறுத்துக!

### அரசுக்கு பொதுபல சேனா எச்சரிக்கை

கொழும்பு, பெப். 24

செயற்பாட்டு அரசியலில் ஈடுபட்டுள்ள பௌத்த பிக்குகளை இலக்கு வைத்து அரசாங்கமும் ஏனைய தரப்பினரும் முன்னெடுத்து வரும் அடிப்படையற்ற விமர்சனங்கள் மற்றும் அவதூறுகளை பொதுபல சேனா அமைப்பு வன்மையாகக் கண்டித்துள்ளது.

நேற்று இராஜகிரியவில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய அந்த அமைப்பின் பொதுச்செயலாளர் கலபொட

07

## வடக்கு ஆசிரியர் இடமாற்றப் பட்டியல் இன்று தொடக்கம் இணையத்தளத்தில்!

யாழ்ப்பாணம், பெப். 24

வடக்கு மாகாணத்தில் 2026ஆம் ஆண்டுக்கான வலயங்களுக்கிடையிலான வருடாந்த ஆசிரியர் இடமாற்றம் தொடர்பான திருத்தப்பட்ட பட்டியல்கள் இன்று செவ்வாய்க்கிழமை முதல் மூன்று கட்டங்களாக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்படவுள்ளதாக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வை.ஜெயச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

கடந்த 2025ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் பிரசுரிக்கப்பட்ட வருடாந்த இடமாற்றத்துக்கான "சேவையின் தேவை கருதிய" இடமாற்றப்

07

## மண்டைதீவு சர்வதேச கிரிக்கெட் மைதான நிர்மாண பணிகளை உடன் இடைநிறுத்துக!

### மத்திய சுற்றாடல் அதிகார சபை உத்தரவு

கொழும்பு, பெப். 24

யாழ்ப்பாணம், மண்டைதீவுப் பகுதியில் அமையவுள்ள சர்வதேச கிரிக்கெட் மைதானம் மற்றும் விளையாட்டு வளாகத்தின் அனைத்து நிர்மாணப் பணிகளையும், சுற்றுச்சூழல் அனுமதி கிடைக்கும்வரை உடனடியாக நிறுத்துமாறு மத்திய சுற்றாடல் அதிகார சபை உத்தரவிட்டுள்ளது.

07



## மிரட்டல்களால் விவாதங்களை மௌனிக்கச் செய்யக்கூடாது!

### லண்டன் உரை ரத்து குறித்து நாமல்

கொழும்பு, பெப். 24

லண்டனில் திட்டமிடப்பட்ட தனது உரைகள் ரத்து செய்யப்பட்டமை துரதிஷ்டவசமான சம்பவம் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தமது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பல்கலைக்கழகங்கள் விவாதங்களை தீர்க்கும் இடங்களாக அமையவேண்டுமே தவிர,

07

## கொழும்பு மாநகர சபை ஊழல்கள் பற்றி முறைப்பாடு செய்யும் கால எல்லை நீடிப்பு!

கொழும்பு, பெப். 24

கொழும்பு மாநகர சபையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல் மற்றும் முறைகேடுகளை விசாரணை செய்வதற்கென நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி ஆணைக்குழுவுக்குத் தகவல்கள் மற்றும் முறைப்பாடுகளைச் சமர்ப்பிப்பதற்கான கால எல்லை மார்ச் மாதம் 16 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2010 ஆம் ஆண்டு முதல் 2025 வரையான காலப்பகுதியினுள் கொழும்பு மாநகர சபையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல், மோசடி, குற்றவியல் நம்பிக்கை மீறல்,

07

## மாடி வீட்டில் இருந்து தவறி விழுந்தவர் பலி!

### சுன்னாகத்தில் துயரம்

யாழ்ப்பாணம், பெப். 24

சுன்னாகத்தில், மாடியில் இருந்து தவறி விழுந்த ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சுன்னாகம் - ஊரெழு பகுதியை சேர்ந்த வயித்திலிங்கம் ஜெயச்சந்திரன் (வயது 57) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அவர் நேற்று முன்தினம் இரவு மாடியில் இருந்து இறங்கியுள்ளார். இதன்போது கால்

07




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசேட செயல்குழு மூன்று மாதங்களுக்குள் அறிக்கை சமர்ப்பித்தால் விரைவில் தேர்தல்!

## தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் கூறுகிறார்

கொழும்பு, பெப். 24

மாகாணசபைத் தேர்தலை எந்தத் தேர்தல் முறைமையில் நடத்தலாம் என்பதை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக பாராளுமன்றத்தில் விசேட செயல் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது. மூன்று மாதத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டால் அதனைத் தொடர்ந்து தேர்தலை நடத்துவதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை விரைவாக முன்னெடுப்போம்.விசேட செயல் குழுவில் முன்னிலையாகி யோசனைகளை முன்வைப்போம் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்தார்.



மாகாண சபைத் தேர்தலை எந்தத் தேர்தல் முறைமையின் நடத்தலாம் என்பதை ஆராய்ந்து விதப்புரைகள் மற்றும் யோசனைகளை முன்வைப்பதற்கு வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தலைமையில் 12 உறுப்பினர்களை உள்ளடக்கிய வகையில் விசேட செயற்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் குறித்து வினவியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் முன்னெடுக்கும் சகல தீர்மானங்கள் மற்றும் நடவடிக்கைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். மாகாண சபைத் தேர்தலை வெகுவிரைவாக நடத்தவேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளோம்.

தேர்தல் முறைமை மற்றும் தேர்தல் சட்டத்தின் குறைகளை அவதானத்து அதற்குரிய திருத்தங்களை முன்வைக்க 2022 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் நியமிக்கப்பட்ட விசேட குழு, 2017 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தின் ஊடாக அறிமுகப்படுத்தப்பட்ட கலப்பு தேர்தல் முறைமைக்கு அமைய எல்லை நிர்ணயம் செய்து அதன் பின்னர் சட்ட வரைவை தயாரிக்கலாம் என்று குறிப்பிட்டுள்ளது. அதுவரை விகிதாசார தேர்தல் முறைமையின் தேர்தலை நடத்தலாம் என்று யோசனை முன்வைக்கப்பட்டது.

எல்லை நிர்ணயம் மற்றும் தொழில்நுட்பக் காரணிகளால் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் பிரச்னை காணப்பட்டது. மாகாண சபைத் தேர்தலை பழையத் தேர்தல் முறையில் நடத்துவதா அல்லது புதிய தேர்தல் முறையில் நடத்துவதா என்ற பிரச்னைக்கு பாராளுமன்றத்தின் ஊடாக தீர்வு காணவேண்டும் என்று உயர்நீதிமன்றம் பல முறை வியாக்கியானம் வழங்கியுள்ளது.

இவ்வாறான பின்னணியில் மாகாண சபைத் தேர்தலை எந்த முறையில் நடத்துவது என்பது பற்றி ஆராய்வதற்கு தற்போது விசேட செயற்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்த குழுவுக்கு முழுமையாக அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. இந்த குழுவில் முன்னிலையாகி எமது தரப்பு யோசனைகளையும் முன்வைக்கவுள்ளோம்.

இந்த விசேட செயல்குழு 3 மாத காலத்துக்குள் யோசனைகள் மற்றும் விதப்புரைகளை முன்வைக்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறாயின் எதிர்வரும் மே மாதத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். செயல்குழு அறிக்கை சமர்ப்பித்தவுடன் தேர்தலை விரைவாக நடத்துவதற்குரிய நடவடிக்கைகளை சட்டத்தின் அதிகாரத்துக்கமைய முன்னெடுப்போம்-என்றார். (அ)

# கரவெட்டியில் விவசாயிகளுக்கு நவீன விவசாய உபகரணங்கள்!



யாழ்ப்பாணம், பெப். 24

வடமராட்சி தெற்கு மேற்கு (கரவெட்டி) பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் விவசாய உற்பத்திகளை மேம்படுத்துவதற்கும் நவீனமயப்படுத்துவதற்கும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனால் விசேட திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதன் ஒரு கட்டமாக, பாராளுமன்ற உறுப்பினரின் 2025 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ், கரணவாய் வடக்கு மற்றும் துன்னாலை மத்தி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள விவசாயிகளுக்குத் தேவையான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் சிறப்பாக நடைபெற்றது.

குறிப்பாக, விவசாயிகள் எதிர்கொள்ளும் மின்சார மற்றும் எரிபொருள் செலவுகளைக் குறைக்கும் நோக்கில், சூரிய மின்கலம் மூலமான நீர் இறைக்கும் மோட்டார் தொகுதிகள் மற்றும் விவசாய உற்பத்திக்குத் தேவையான நவீன உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டன.

இத்திட்டமானது குறித்த கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட விவசாய சம்மேளனங்களிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டதுடன், பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனால் வைபவ ரீதியாகவும் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

தொடர்ந்து, கருத்துக்களைத் தெரிவித்த பயனாளிகள் மற்றும் பிரதிநிதிகள், விவசாய உற்பத்திகளில் நவீன தொழில்நுட்பங்களைப் புகுத்துவதன் மூலம் விவசாயிகளின் பொருளாதாரத்தைச் சுயமாகக் கட்டியெழுப்ப முடியும் என்பதோடு, அதற்கான வழிமுறைகளை ஏற்படுத்திய பாராளுமன்ற உறுப்பினருக்கு தமது நன்றிகளையும் தெரிவித்தனர்.

இந்நிகழ்வில் கரவெட்டி பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர், வடமராட்சி இணைப்பாளர் ஜெயக்குமாரன் அருண்குமார், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கமக்கார அமைப்பினர், உள்ளூர் விவசாயிகள் மற்றும் கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (எ)

# ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

வவுனியா, பெப். 24

வவுனியா பறங்கியாற்று பகுதியில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக ஈச்சங்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன் தினம் அதிகாலை பறங்கியாற்று பகுதிக்கு சென்றவர் வீடு திரும்பாத நிலையில் குடும்பத்தினர் மற்றும் அயலவர்களுடன் இணைந்து தேடுதலில் ஈடுபட்ட நிலையில் ஆற்றினுள் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பறங்கியாற்று பகுதியை சேர்ந்த 44 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

குறித்த நபரின் சடலம் மேலதிக நடவடிக்கைகளுக்காக வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் வனவிலங்குக்காக வைக்கப்பட்ட சட்டவிரோத மின் கம்பியில் சிக்குண்டு உயிரிழந்திருக்கலாம் எனும் சந்தேகத்தின் அடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# முள்ளியவளையில் சைக்கிள் திருட்டு!

முல்லைத்தீவு, பெப். 24

முல்லைத்தீவு முள்ளியவளை பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த துவிச்சக்கர வண்டியொன்று பட்டப்பகலில் திருடப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த துவிச்சக்கர வண்டி தனியார் கல்வி நிலையத்துக்கு கல்வி பயில வந்த மாணவர்களால் வீதி ஓரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில், இளைஞர் ஒருவர் அதனை திருடிச் செல்லும் காணொளி அப்பகுதியில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி காணொளியில் தெளிவாக பதிவாகியுள்ளது.

திருட்டில் ஈடுபட்டதாகக் கூறப்படும் இளைஞனின் உருவம் காணொளியில் பதிவாகியுள்ள நிலையில், அவரை அடையாளம் காண பொதுமக்களின் உதவியை பொலிஸார் கோரியுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறித்த இளைஞனை அடையாளம் காணக் கூடிய தகவல்கள் இருப்பின் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (அ)

# நல்லூர் பிரதேச சபை நிதியை வீண் விரயம் செய்யவில்லை!

## தவிசாளர் மயூரன் தெளிவுபடுத்தல்

யாழ்ப்பாணம், பெப். 24

நல்லூர் பிரதேச சபை வெளிவாரி ஊழியர்களுக்கு கொடுப்பனவுகளைச் செலுத்தி நிதியை வீண்விரயம் செய்யவில்லை எனவும் சபையில் தீர்மானங்கள் எடுக்கும்போது, அதற்கு ஆதரவளித்து பின்னர் அரசியல் நோக்கங்களுக்காக சிலர் திரிவுபடுத்திய தகவல்களை வெளியிடுவதாகவும் நல்லூர் பிரதேச சபை தவிசாளர் ப.மயூரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

நல்லூர் பிரதேச சபை வெளிவாரியாக ஒப்பந்த அடிப்படையில் உள்வாங்கிய ஊழியர்களுக்கு மிகப் பெரிய தொகையை வழங்கி வருவதாக தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் குற்றம் சாட்டி வருகின்றார்கள்.

வெளிவாரியாக உள்வாங்கப்பட்ட ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்ற கொடுப்பனவு குறைவாக இருக்கின்ற காரணத்தினால் அவர்களுக்கான கொடுப்பனவுத் தொகையை உரிய சட்ட ஏற்பாடுகளுக்கு அமையவும் உரிய நடைமுறைகளின் பிரகாரமும் உயர்த்துவதற்கு கடந்த வருடம் ஜூன் மாதம் சபையில் தீர்மானம் எடுக்கப்பட்டு அத் தீர்மானத்துக்கு அமைய ஒகஸ்ட் மாதத்திலிருந்து குறித்த கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது.

குறித்த தீர்மானத்துக்கு தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்களும் ஆதரவளித்தனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அத்துடன் எமது மீள் சுழற்சி மையங்களில் கழிவுப் பொருட்களை தரப்பிரிப்பதற்கென மேலதிக ஊழியர்கள் உள்வாங்கப்பட்டமை போன்ற செயற்பாடுகளினால் வெளிவாரி ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்ற மொத்தக் கொடுப்பனவுத் தொகை அதிகரித்துச் சென்றுள்ளது.

ஆனால் யாருக்கும் நல்லூர் பிரதேச சபை தேவையில்லாமல் கொடுப்பனவுகளை வழங்கவில்லை. அவர்கள் செய்கின்ற பணிக்கு அவர்களுக்குரிய கொடுப்பனவுகளை உரிய முறைப்படி வழங்கி வருகின்றது.

அதேவேளை, சபை அமர்வைப் பார்வையிடுவதற்கு நல்லூர் பிரதேச சபை கொடுப்பனவு வழங்குவதாக கூறப்பட்டமை தொடர்பாகவும் தெளிவுபடுத்த வேண்டும்.

சபை அமர்வை பார்வையிடுவதற்கும் நல்லூர் பிரதேச சபை கொடுப்பனவு வழங்கி வருவதாக பொய்யான தகவலைத் தெரிவித்து அவர்கள் தங்களை சிறுமைப்படுத்தியுள்ளனர். அவர்கள் கூறுகின்ற வரதராஜன் பார்த்திபன் என்னும் நபர் வெளிவாரி அடிப்படையில் அலுவலகப் பணியாளராக உள்வாங்கப்பட்டு பணிபுரிகின்றார்.

அவர் அலுவலகக் கடமையுடன் என்னுடைய தனிப்பட்ட உதவியாளராகவும் கடமை ஆற்றிவருகின்றார். அவர் சபை நடவடிக்கையை பார்வையிடுவதற்கு நல்லூர் பிரதேச சபை அவருக்கு கொடுப்பனவு வழங்கவில்லை. மாறாக ஏனைய வெளிவாரி பணியாளர்களுக்குரிய நடைமுறை போல் அவர் தன்னுடைய பணிக்காக நல்லூர் பிரதேச சபைக்கு வரும் நாட்களுக்கு மட்டும் அவருக்கான கொடுப்பனவு நல்லூர் பிரதேச சபையினால் வழங்கப்படுகின்றது-என்றுள்ளது. (அ)

# போதைக்கு அடிமையானவர்களை மீட்கும் புனர்வாழ்வு திட்டம் வெற்றி

கொழும்பு, பெப். 24

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களை மீட்கும் நோக்கில் முன்னெடுக்கப்படும் தன்னார்வ புனர்வாழ்வுத் திட்டம் பாரிய வெற்றியை அளித்துள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் புனர்வாழ்வு பெற்ற முதலாவது குழுவினர் தமது சிகிச்சைகளை வெற்றிகரமாக நிறைவு செய்து, தற்போது வீடுகளுக்குத் திரும்பியுள்ளதாக புனர்வாழ்வு பணியகத்தின் உதவி ஆணையாளர் கேணல் சன்ன கோமஸ் விடுத் துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் பழக்கத்திலிருந்து விடுபட விரும்பும் எவரும் இந்தத் திட்டத்தில் சுயமாக இணைந்து கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டார்.

இதற்கான சேர்க்கை நடைமுறைகள் மற்றும் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர், புனர்வாழ்வு பணியகத்தின் 0112 883 891 என்ற நேரடித் தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
24.02.2026 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம், மாசி 12

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# மாகாண சபை தேர்தல்களும் பாராளுமன்ற தெரிவுக் குழுவும்

சுமார் எட்டு வருடங்களாக தாமதிக்கப்பட்டிருக்கும் மாகாண சபை தேர்தல்களை எத்தகைய தேர்தல் முறையின் கீழ் நடத்துவது என்பது குறித்து ஆராய்வதற்காக வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் தலைமையில் பாராளுமன்ற தெரிவுக் குழு ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழு அதன் அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு மூன்று மாத கால அவகாசம் வழங்கப்பட்டிருக்கிறது.

பிரச்னை ஒன்றுக்கு தீர்வைக் காண்பதை தவிர்ப்பதற்காக காலத்தைக் கடத்துவதற்காகவே ஆணைக்குழுக்களும் தெரிவுக்குழுக்களும் நியமிக்கப்படுவது இலங்கையில் வழமையான ஒரு காரியம் என்பதே எமது நீண்ட கால அனுபவமாக இருக்கிறது. இந்த தெரிவுக்குழு மூன்று மாத காலத்திற்குள் அதன் அறிக்கையை சமர்ப்பிக்குமா இல்லையா என்பதை எவராலும் தற்போது கூறமுடியாது. மேலும் கால அவகாசத்தை அது கேட்குமோ தெரியாது.

தனது தலைமையிலான இந்த தெரிவுக்குழுவின் முதலாவது கூட்டம் பாராளுமன்றத்தின் அடுத்த அமர்வின்போது இடம்பெறும் என்று வெளியுறவு அமைச்சர் அறிவித்திருக்கிறார்.

உள்ளூராட்சி தேர்தல்களைப் போன்று மாகாணசபை தேர்தல்களையும் பழைய தொகுதி அடிப்படையிலான முறையையும் தற்போதைய விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைறையும் உள்ளடக்கிய "கலப்பு" தேர்தல் முறையில் நடத்துவதற்காக "நல்லாட்சி" காலத்தில் மாகாணசபை தேர்தல் சட்டத்தில் செய்யப்பட்ட திருத்தமே தேர்தல்களை நடத்தமுடியாமல் இருப்பதற்கான காரணமாகும். மாகாணங்களில் தொகுதிகளை எல்லை நிர்ணயம் செய்த குழுவின் அறிக்கையை அன்றைய பாராளுமன்றம் நிராகரித்ததை அடுத்தே தேர்தல்களை எட்டு வருடங்களாக நடத்த முடியாமல் இருக்கிறது.

மாகாணசபை தேர்தல்களை நடத்துவதற்கான முறை குறித்து ஆராயவிருக்கும் தெரிவுக்குழு "கலப்பு" முறையில் நடத்த வேண்டும் என்ற முடிவுக்கு வருமாக இருந்தால் மீண்டும் எல்லை நிர்ணயக் குழுவை நியமிக்க வேண்டிவரும். அத்தகைய ஒரு குழுவின் செயற்பாடுகள் சில மாதங்களில் நிறைவடைவது அறவே சாத்தியமில்லை. இது அரசாங்கத்துக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் நன்றாகவே தெரியும்.

அதனால், மாகாண சபை தேர்தல்களை மேலும் தாமதிப்பதற்கான ஒரு வியூகமாக தெரிவுக்குழு நியமிக்கப்படவில்லை என்பதை நிரூபிக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகிறது. மாகாணசபை தேர்தல் சட்டத்துக்கு மீண்டும் ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்து முழுமையாக தேர்தலை விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் நடத்துவதற்கான ஏற்பாட்டை செய்வது மாத்திரமே உண்மையில் மாகாணங்களின் நிருவாகத்தை மக்களால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளிடம் விரைவாக ஒப்படைப்பதற்காக நடைமுறைச் சாத்தியமான வழியாகும்.

இலங்கை தமிழரசு கட்சியின் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் சமர்ப்பித்திருக்கும் தனிநபர் பிரேரணையை நிறைவேற்றுவதற்கு உதவ அரசாங்கம் விரும்பவில்லையானால், விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் மாத்திரம் மாகாணசபை தேர்தல்களை நடத்துவதற்கான சட்டமூலத்தை அரசாங்கம் தானாகவே கொண்டுவரலாம். இதற்காக அரசாங்கம் விரும்பினால் தெரிவுக் குழுவில் ஏகமனதான தீர்மானத்தை எடுப்பதில் எந்தப் பிரச்சினையும் வராது. எதிர்க்கட்சிகள் மாகாணசபை தேர்தல்களை விரைவாக நடத்தவேண்டும் என்று அரசாங்கத்திடம் இடையறாது கோரிக்கை விடுத்த வண்ணமே உள்ளன.

தெரிவுக்குழு வேண்டுமானால் மாகாணசபைத் தேர்தல்களை எதிர்காலத்தில் எவ்வாறு நடத்துவது என்பதை தீர்மானிப்பதற்கு தொடர்ந்து கூட்டங்களை நடத்தலாம். அது வேறுவிடயம்.

என்னதான் தெரிவுக் குழுவை நியமித்தாலும், அரசாங்கத்தின் நிலைப்பாடு என்னவாக இருக்கிறதோ அதில்தான் சாத்தியமானளவு விரைவாக மாகாணசபை தேர்தல்களை நடத்துவதற்கான சாத்தியம் முற்றுமுழுதாக தங்கியிருக்கிறது.

# 3 இலட்சம் எரிவாயு கொள்கலன்கள் நேற்று முதல் சந்தைக்கு விநியோகம்

கொழும்பு, பெப். 24

சந்தைக்கு 3 இலட்சம் சமையல் எரிவாயு சிலிண்டர்களை விநியோகிக்கும் பணிகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

3, 900 மெட்ரிக் தொன் எரிவாயுவை தாங்கிய கப்பல் நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்ததுடன், அதனைத் தரையிறக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

மேலும், இரண்டு எரிவாயு கப்பல்கள் 25 மற்றும் 28ஆம் திகதிகளில் நாட்டை வந்தடையவுள்ளன.

இந்த நிலையில், நேற்று முதல் நாளொன்றுக்கு ஒரு இலட்சம் எரிவாயு கொள்கலன்களை சந்தைக்கு விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் மூலம், தற்போது நிலவும் தட்டுப்பாடு படிப்படியாக குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

போதிய கையிருப்பைப் பேணுவதற்காக புதிய கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. பெப்ரவரி மாதம் நிறைவடைவதற்குள் அந்த எரிவாயு கப்பல்கள் நாட்டை வந்தடையவுள்ளன.

இதேநேரம் எதிர்வரும் மார்ச் மாதம் 12ஆம் திகதி முதல் அதிகளவிலான லிட்ரோ எரிவாயு கொள்கலன்களை சந்தைக்கு விநியோகிக்க எதிர்பார்ப்பதாக வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க அண்மையில் தெரிவித்திருந்தார்.

கடந்த சில நாட்களாக நாட்டின் பல பகுதிகளில் லிட்ரோ மற்றும் லாப்ஸ் எரிவாயுவுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக நுகர்வோர் குற்றம் சுமத்தியிருந்ததுடன், பல இடங்களில் மக்கள் நீண்ட வரிசைகளில் காத்திருந்ததையும் காணக்கூடியதாக இருந்தது.

எரிவாயு விநியோகிக்கப்படும் திகதி குறித்து தமக்கு சரியான தகவல் வழங்கப்படவில்லை என்று வர்த்தகர்களும் தெரிவித்திருந்தனர்.

எவ்வாறாயினும், 3 இலட்சம் எரிவாயு கொள்கலன்களை விநியோகிக்கும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதால், சந்தையில் நிலவும் நெருக்கடி நிலை விரைவில் சீராகும் என்று லிட்ரோ நிறுவனம் உறுதியளித்துள்ளது.(எ)

# சுகாதார சேவைகளில் எவ்வித பாதிப்புமில்லை

## சுகாதார பிரதி அமைச்சர்

கொழும்பு, பெப். 23

அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கம் கடந்த இரண்டு மாதங்களாகப் பல்வேறு தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றபோதிலும், நாட்டின் சுகாதார சேவைகள் எவ்விதப் பாதிப்புமின்றி முன்னெடுக்கப்படுவதாகச் சுகாதார பிரதி அமைச்சர் ஹன்சக விஜேமுனி தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சுக்குத் தேவையான அத்தியாவசியத் தரவுகளை வழங்குவதில் இருந்து அரச வைத்தியர்கள் அண்மையில் விலகியிருந்த நிலையில் இது குறித்துக் கருத்து வெளியிட்ட பிரதி அமைச்சர்,

குறித்த தொழிற்சங்கத்தின் கோரிக்கைகளில் 90 வீதமானவை நிதிச் சலுகைகள் தொடர்பானவை எனச் சுட்டிக்காட்டினார்.

குறிப்பாக, வாகன அனுமதிப்பத்திரங்களை மீண்டும் வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளபோதிலும், தற்போதைய டொலர் கையிருப்பு மற்றும் பொருளாதார நிலைமைகளின் கீழ் அதனை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்கள் உள்ளதாக அவர் விளக்கினார்.

புயல் அனர்த்தத்தின்போது கூட இக்குழுவினர் தொழிற்சங்க நடவடிக்கைகளைத் தொடர்ந்ததாகக் குறிப்பிட்ட அவர், அரச ஊழியர்கள் 2027ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம் வரை சம்பள உயர்வுகளைக் கோருவதைத் தவிர்க்குமாறு ஜனாதிபதி விடுத்துள்ள வேண்டுகோளையும் நினைவுபடுத்தினார்.

எவ்வாறாயினும், தொழிற்சங்கப் போராட்டங்களுக்கு மத்தியிலும் நாடளாவிய ரீதியில் உள்ள வைத்தியர்கள் நோயாளர் பராமரிப்புச் சேவைகளைத் தடையின்றி வழங்கி வருவதாக அவர் உறுதிபடத் தெரிவித்தார். (அ)

# அரநாயக்கவில் மீண்டும் அபாயம்

கேகாலை, பெப். 24

"டித்வா" புயலால் ஏற்கனவே மண்சரிவுக்குள்ளான அரநாயக்க பகுதியில் கடும் மழை பெய்ததால் மீண்டும் மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதன்படி, அரநாயக்கவின் அம்பலகந்த, தோதல்தோய மற்றும் கந்துன ஆகிய பகுதிகளுக்கு இந்த அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

அரநாயக்க நகரில் இருந்து தோதல்தோய வரை செல்லும் பிரதான வீதி நடுவே மிகவும் அபாயகரமான முறையில் வெடித்து தாழிறங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் தோதல்தோய கிராமத்துக்கு வாகனங்களில் பிரவேசிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன், மாற்று வீதியான புவக்வத்த வீதியிலும் மண்மேடுகள் சரிந்து விழுந்துள்ளன. (எ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எதையோ இழந்ததைப் போல் ஒருவித கவலைகள் வந்து போகும். நீங்கள் சிலருக்கு நல்லது சொல்லப் போய் பொல்லாப்பாக முடியும். கவனம் தேவைப்படும் நாள்.

**இடபம்**
அனாவசிய செலவுகளை குறைக்கப்பாருங்கள். திடீர் பயணங்கள் இருக்கும். வியாபாரத்தில் பாக்கிகளை கறாராகப் பேசி வசூலிப்பீர்கள். மகிழ்ச்சி உண்டாகும். கடினமாக உழைக்க வேண்டும்.

**மிதுனம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு இருக்கும். சொத்து வாங்குவது குறித்து யோசிப்பீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும்.

**கடகம்**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். உங்களால் வளர்ச்சியடைந்த சிலரை இப்பொழுது சந்திக்க நேரிடும். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். வியாபாரத்தில் புது முடிவுகள் எடுப்பீர்கள்.

**சிம்மம்**
புதிய பாதையில் பயணிக்கத் தொடங்குவீர்கள். பிள்ளைகள் பொறுப்புணர்ந்து செயல்படுவார்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். சாதிக்கும் நாள்.

**கன்னி**
சந்திராஷ்டமம் நீடிப்பதால் வேலைச்சுமை இருந்து கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாவதில் தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் அலட்சியம் வேண்டாம்.

**துலாம்**
சந்திராஷ்டமம் நீடிப்பதால் வேலைச்சுமை இருந்து கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாவதில் தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் அலட்சியம் வேண்டாம்.

**விருச்சிகம்**
குடும்பத்தினருடன் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். விருந்தினர்களின் வருகையால் வீடு களைக்கட்டும். பிரபலங்கள் அறிமுக மாவார்கள். அதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள்.

**தனுசு**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். உறவினர்களில் உண்மையானவர்களை கண்டறிவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். கனவு நனவாகும் நாள்.

**மகரம்**
திட்டவட்டமாக காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். தாய்வழி உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். உழைப்பால் உயரும் நாள்.

**கும்பம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உடன்பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். வியாபாரத்தில் சில மாற்றம் செய்வீர்கள். துணிச்சல் அதிகரிக்கும் நாள்.

**மீனம்**
குடும்பத்தினர் கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். அழகும் இளமையும் கூடும். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். மதிக்கப்படுவீர்கள். தடைப்பட்ட வேலைகள் நடக்கும்.

# எரிவாயு தட்டுப்பாட்டுக்கு தீர்வின்றேல் கோட்டாவின் நிலையே அநுரவுக்கும்

**சம்பிக்க ரணவக்க எச்சரிக்கை**

கொழும்பு, பெப். 24

அரசாங்கம் எரிவாயு விநியோகத்துக்கான பொறுப்பை பிரித்தானிய நிறுவனத்துக்கு வழங்கியுள்ளது. குறைவான விலைக்கு எரிவாயு கொள்வனவுக்கு விலைமனுக்கோரல் செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், எரிவாயு விநியோகத்தில் தொழில்நுட்ப பிரச்னைகள் ஏற்பட்டுள்ளன. இதனால், தான் எரிவாயு விநியோகத்தில் தற்போது சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது. அரசாங்கம் இந்த பிரச்னைக்கு உடன் தீர்வு காண வேண்டும் இல்லையேல் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஏற்பட்ட கதியே அநுரவுக்கும் ஏற்படும் என்று முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க எச்சரித்துள்ளார்.

கொழும்பில் உள்ள ஐக்கிய குடியரசு முன்னணியின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

# இந்துக்குருமார்களுக்கு கிரந்த எழுத்துப்பயிற்சி

யாழ்ப்பாணம், பெப். 24

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் இந்துமதக் குருமார்களுக்கான கிரியைகள் மற்றும் கிரந்த எழுத்துப் பயிற்சிக் கற்கை நெறி ஆரம்ப நிகழ்வு கடந்த சனிக்கிழமை இணைய வழிமூலம் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய. அநிருத்தனன் தலைமையில் ஆரம்பமானது. ஆசியுரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துக்கற்கைகள் பீட பீடாதிபதி பிரம்மசிறீ ச. பத்மநாபசர்மாவும், வாழ்த்துரையை செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறுதிருமுருகனும் ஆற்றினர். சிவாட்சர கௌசிகா குருகுல அதிபர் பிரம்மசிறீ ப. சிவானந்தசர்மா மற்றும் பிரம்மசிறீ. முதுகலைமாணி (சமஸ்கிருதம்) சு. நவநீதகிருஷ்ணசர்மாவும் வளவாளர்களாக கலந்து கொண்டனர். இந்த பயிற்சி நெறியில் கலந்து கொள்ள விரும்பும் இந்துக்குருமார்கள், இணைப்பாளர் - இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி மா. அனந்தலெச்சுமியின் 077, 665, 0648 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (எ)

# போதைப்பொருளுடன் கைதான சட்டத்தரணிக்கு விளக்கமறியல்

கொழும்பு, பெப். 24

கொழும்பு, கெசல்வத்தை - சஞ்சியாராச்சி வத்தை பகுதியில் கைவிடப்பட்ட கட்டடமொன்றில் 'ஐஸ்' போதைப்பொருளை பயன்படுத்தியதாக கூறப்படும் சட்டத்தரணி ஒருவர் கெசல்வத்தை பொலிஸ் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை மாளிகாகந்த நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போது, அவரை வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேகநபரிடமிருந்து 130 மில்லிகிராம் 'ஐஸ்' போதைப்பொருள், அதனை உட்கொள்ள பயன்படுத்தப்படும் பல்வேறு உபகரணங்கள் மற்றும் சட்டத்தரணி அடையாள அட்டை ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், பெப். 24

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோவில் நடத்தும் வாராந்த சுக்கிரவார கந்தபுராண படனத் தொடர் 45ஆவது சொற்பொழிவு கோவில் சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 05. 30 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது.

நிலக்கரி கொள்வனவு ஊழல் தொடர்பில்

# அரசின் மீது ஒட்டுமொத்தமாக குற்றம் சுமத்துவது முறையற்றது

கொழும்பு, பெப். 24

நாட்டில் அதிகரித்து வரும் பாதாள உலகக் குழுக்களின் செயல்பாடுகள் மற்றும் நிலக்கரி கொள்வனவு ஊழல்கள் தொடர்பில் அரசாங்கத்தின் மீது ஒட்டுமொத்தமாக குற்றம் சுமத்துவது முறையற்றது என முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

நிலக்கரி ஊழலுக்குப் பொறுப்பான அமைச்சர் இது குறித்து உரிய பதிலை வழங்க வேண்டும். ஒரு தனிப்பட்ட அமைச்சரின் அல்லது அதிகாரியின் தவறுக்காக ஒட்டுமொத்த அரசாங்கத்தையும் பட்டை தீட்டுவது தவறான அரசியல் கலாசாரமாகும். குறித்த அமைச்சரால் தெளிவான விளக்கத்தை அளிக்க முடியாவிட்டால், அவரை அமைச்சரவையிலிருந்து நீக்கிவிட்டு, அரசாங்கம் புதிய அமைச்சரை நியமிக்க வேண்டும். உண்மையான குற்றவாளியை விட்டுவிட்டு அரசாங்கத்தை மட்டும் விமர்சிப்பதன் மூலம் உண்மையான குற்றவாளி தப்பித்துக் கொள்ளவே வழி பிறக்கும்- என்றார். (எ)

# பிரதான ஆறுகளின் நீர்மட்டம் நேற்று வழமைக்கு திரும்பியது

**நீர்ப்பாசன திணைக்களம் தகவல்**

கொழும்பு, பெப். 24

கடந்த சில தினங்களாக நிலவிய மழையுடனான வானிலை குறைவடைந்துள்ள நிலையில், நாட்டின் அனைத்து பிரதான ஆறுகளின் நீர்மட்டமும் தற்போது வழமைக்கு திரும்பியுள்ளதாக நீர்ப்பாசனத் துறையின் நீரியல் மற்றும் அனர்த்த மேலாண்மை பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்று நண்பகல் 12. 30 மணி நிலவரப்படி வெளியிடப்பட்டுள்ள அறிக்கையின் முக்கிய விவரங்கள் வருமாறு:

திணைக்களத்தினால் கண்காணிக்கப்படும் அனைத்து பிரதான ஆறுகளின் நீர்மட்டமும் தற்போது "சாதாரண" மட்டத்திலேயே காணப்படுகின்றன.

குறிப்பாக களனி கங்கை: நாகலகம் வீதி, ஹங்வெல்ல மற்றும் கிதுல்கல ஆகிய பகுதிகளில் நீர்மட்டம் எச்சரிக்கை மட்டத்துக்கும் குறைவாகவே காணப்படுகிறது.

களு கங்கை: இரத்தினபுரி மற்றும் புடுபாவுல பகுதிகளில் நீர்மட்டம் குறைவடைந்துள்ளது.

ஜின் கங்கை மற்றும் நில்வலா கங்கை: பத்தேகம, தவலம மற்றும் தெல்கஹகொட பகுதிகளில் வெள்ள அபாயம் எதுவுமில்லை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மகாவலி கங்கை: பேராதனை மற்றும் நாவலப்பிட்டி பகுதிகளில் நீர்மட்டம் வழமையான நிலையில் உள்ளது- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூ. 7,600 கோடி நஷ்டத்தை ஈடுகட்டவே மின் கட்டணத்தை அதிகரிக்க முயற்சி

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 24

அரசாங்கத்தின் நிலக்கரி கொள்வனவில் பாரிய ஊழல் இடம்பெற்றுள்ளது. இதனால், நாட்டுக்கு ஏற்பட்டுள்ள 7,600 கோடி ரூபாய் நஷ்டத்தை ஈடுகட்டவே மின் கட்டணத்தை அதிகரிக்க முயற்சிப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம். மரிக்கார் குற்றம்சாட்டியுள்ளார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தனது அரசாங்கத்தில் எந்தவித ஊழல், மோசடியும் இடம்பெறவில்லை எனக் கூறிக்கொண்டிருந்தாலும், தேசிய மக்கள் சக்தியின் பின்வரிசை எம்.பி.க்கள் நிலக்கரி மோசடிக்கு துணைபோவதை நிறுத்தவில்லை. ஆரம்பத்திலிருந்தே இதில் மோசடிகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில், கப்பல்களும் தாமதமாகவே வருகின்றன. கப்பல்கள் தாமதமாக வருவதற்கான எந்தவித நடவடிக்கைகளும் உரிய தரப்பினரால் எடுக்கப்படவில்லை. இதுவரை வருகை தந்துள்ள 8 கப்பல்களிலுமுள்ள நிலக்கரிகளும் தரத்தில் குறைவானவை என்று இலங்கை மின்சார சபையின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் 7,600 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.- என்றார். (எ)

# சிறைச்சாலை உத்தியோகத்தரின் கையை வெட்டி திருடியவர்கள் கைது

கொழும்பு, பெப். 24

ஹிக்கடுவ பகுதியில் சிறைச்சாலை உத்தியோகத்தர் ஒருவரின் கையை கத்தியால் வெட்டிக் காயப்படுத்தி, மோட்டார் சைக்கிளை கொள்ளையிட்டமை உள்ளிட்ட பல திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய நான்கு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 22, 33, 35 மற்றும் 36 வயதுடைய திப்பத்துகொட, ஹொரணை, மொரகஹஹேன மற்றும் புலத்சிங்கள ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

கொள்ளையிடப்பட்ட பொருட்களை பாகங்களாகப் பிரித்து விற்பனை செய்வதற்காக அவற்றை வாங்கித் வைத்திருந்த ஒருவரும் இந்த நால்வரில் அடங்குகிறார்.

கொள்ளைச் சம்பவங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட துருப்பிடிக்காத உருக்கினால் செய்யப்பட்ட மன்னா கத்தி மற்றும் திருடப்பட்ட மூன்று மோட்டார் சைக்கிள்களை மீட்டுள்ளனர்.

இதில் ஒரு மோட்டார் சைக்கிள் பாகங்களாகப் பிரிக்கப்பட்ட நிலையில் புலத்சிங்கள பகுதியில் மீட்கப்பட்டுள்ளதுடன், சந்தேகநபர்களால் திருடப்பட்ட சில பொருட்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் இரவு நேர சோதனை பணியின் போது ஹெரோயினுடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் ஒருவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் போதே இந்தத் தொடர் குற்றச் செயல்கள் அம்பலமாகியுள்ளன. (எ)

# ஓட்டோ சாரதி கொலை: 16 வயது சிறுவன் கைது!

புத்தளம், பெப். 24

புத்தளம் பகுதியில் ஓட்டோ சாரதி ஒருவரை படுகொலை செய்து, அவரது வாகனத்தை கொள்ளையடித்த குற்றச்சாட்டில் 16 வயது சிறுவன் ஒருவர் புத்தளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை, புத்தளம் - அடப்பனாவில்லு பகுதியில் உள்ள வாய்க்கால் ஒன்றிலிருந்து சடலம் மீட்கப்பட்டது. இது குறித்து பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்த விசாரணைகளுக்கமைய, உயிரிழந்தவர் புத்தளம் பகுதியைச் சேர்ந்த 75 வயதுடைய ஒருவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது. இவர் கடந்த 21ஆம் திகதி இரவு வாடகை பயணம் ஒன்றுக்காக சென்றிருந்த நிலையில் காணாமல் போயிருந்தார்.

இதன்போது, ஓட்டோவை கொள்ளையிடும் நோக்கில், சந்தேகநபர் குறித்த சாரதியின் கழுத்துப் பகுதியில் கூர்மையான ஆயுதத்தால் தாக்கிக் கொலை செய்துள்ளார்.

சந்தேக நபர் தில்அடிய - ரத்மல்யாய பகுதியைச் சேர்ந்த 16 வயது சிறுவன் என தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சிறுவன் போதைப்பொருளுக்கு அடிமையானவர் என்பதும், பணத்துக்காகவே இந்தக் கொலையைச் செய்ததாகவும் பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்துள்ளார். (எ)

# பெண்ணின் சடலம் மீட்பு

கொழும்பு, பெப். 24

மொறட்டுவை, கொரலவெல்ல ஜூபிலி வீதி கடற்கரையில் பெண் ஒருவரின் சடலம் கரையொதுங்கியுள்ளதாக மொறட்டுவை பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சடலமாக மீட்கப்பட்டவர் மொறட்டுவை, கொரலவெல்ல பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய பெண் என அடையாளம் காணப்பட்டுள்ளார். (எ)

# ஐஸ் போதைப்பொருளுடன் கொழும்பில் ஒருவர் கைது

கொழும்பு, பெப். 24

கிராண்ட்பாஸ், மாதுரகே மாவத்தை பகுதியில் 510 கிராம் 440 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் குழுவொன்றுக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் அங்கோடை பகுதியை சேர்ந்த 31 வயதுடைய நபர் எனத் தெரியவந்துள்ளது. (எ)

# 25 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் திருடியவர் கைது

கொழும்பு, பெப். 24

மீகொடை பகுதியில், வீடொன்றில் புகுந்து தங்க நகைகளை திருடிய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுமார் 25 இலட்சத்து 50, 000 ரூபாய் பெறுமதியுடைய தங்க நகைகளை திருடியதாக தெரியவந்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதற்கமைய, நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மீகொடை பொலிஸாரால் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது, சந்தேகநபரிடமிருந்து 04 தங்க நெக்லஸ்கள், 03 தங்க மோதிரங்கள், ஒரு பதக்கம், 18, 770 ரூபாய் பணம் மற்றும் தங்க நகைகளை அடகு வைத்த 03 பற்றுச்சீட்டுக்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# விபத்தில் இளைஞர் பலி!

கொழும்பு, பெப். 24

களுத்துறை வடக்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாகசந்தி பகுதியில் நேற்றுக்காலை கார் - மோட்டார் சைக்கிள் மோதி இடம்பெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்திய இளைஞன் உயிரிழந்தார்.

அத்துடன் பின்னால் அமர்ந்து பயணித்தவர் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் களுத்துறை வடக்கு, சமகிபுர வஸ்கடுவ பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞராவார்.

குறித்த இளைஞன் தனது நண்பருடன் மோட்டார் சைக்கிளில் பாணந்துறையில் இருந்து களுத்துறை நோக்கிச் சென்று கொண்டிருந்த போது, நாகசந்தி பகுதியில் வலதுபுறமாக உள்ள வீதிக்குத் திரும்ப முற்பட்டார்.

இதன்போது, முன்னால் வந்த காரில் மோதி இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்து தொடர்பில் கார் சாரதி களுத்துறை வடக்கு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பயங்கரவாதத்தில் இருந்து அரசை பாதுகாத்தல்:

# புதிய சட்டத்தை நீக்கக் கோரி கிழக்கில் கையெழுத்து வேட்டை



திருக்கோவில், பெப். 24

நாட்டிலிருந்து பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக் கோரியும் புதிதாக கொண்டுவரப்படவுள்ள பயங்கரவாதத்தில் இருந்து அரசை பாதுகாத்தல் எனும் புதிய சட்டத்தை நீக்கக் கோரியும் வடக்கு கிழக்கில் கையெழுத்து சேகரிக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.


அந்த வகையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அம்பாறை மாவட்டம் திருக்கோவில் தம்பிலுவில் மத்திய சந்தைக்கு முன்பாக கையெழுத்து சேகரிக்கும் பணி முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு- கிழக்கு தமிழ் மக்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி தம்பிராசா செல்வராணி, மனித உரிமை செயல்பாட்டாளர் தாமோதரம் பிரதீபன், சமூக செயல்பாட்டாளர் துரையப்பா காந்தன், ரெலோவின் மாவட்ட பொறுப்பாளர், தமிழ் அரசுக் கட்சியின் முக்கியஸ்தர்கள், மதகுருமார்கள், பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளிட்டோரும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க உறுப்பினர்கள், சமூக செயல்பாட்டாளர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு இந்தப் பணியை முன்னெடுத்திருந்தனர்.

இந்த இரண்டு சட்டங்களும் எமக்குத் தேவையில்லை என்று தெரிவித்து பல பொதுமக்களும் ஆர்வத்துடன் கையெழுத்திட்டனர்.

(எ)

# நீருக்கடியில் மறைத்து வைத்திருந்த பெருமளவு கோடா கைப்பற்றல்



மட்டக்களப்பு, பெப். 24

நீருக்கடியில் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 80 ஆயிரம் லீற்றர் கோடாவை காத்தான்குடி பொலிஸார் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை மீட்டுள்ளனர் என்று காத்தான்குடி பொலிஸ் நிலைய சிறு குற்றத்தடுப்பு பொலிஸ் பொறுப்பதிகாரி ஏ. றஹீம் தெரிவித்தார்.

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆரையம்பதி மாவிலங்கத்துறை ஆற்றில் நீருக்கடியில் சூட்சுமமான முறையில் பரல்கள் மற்றும் கலன்களில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த கோடாவை பொலிஸார் மீட்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லலித் லீலாரத்னவின் பணிப்புரையின் கீழ் காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஐ.பி. அழககோனின் வழிகாட்டலில் காத்தான்குடி பொலிஸ் நிலைய சிறு குற்றத்தடுப்பு பொலிஸ் பொறுப்பதிகாரி ரஹீம் தலைமையிலான காத்தான்குடி பொலிஸார் நடத்திய திடீர் சுற்றிவளைப்புகளின் போதே பெருமளவு கோடா கைப்பற்றப்பட்டுள்ளது.

தப்பியோடிய சந்தேக நபர்களை பொலிஸார் தேடி வருவதோடு, இது தொடர்பில் காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(எ)

# முன்பள்ளி ஆசிரியர்கள் ஹற்றனில் கவனவீர்ப்பு




ஹற்றன், பெப். 24

தோட்ட நிர்வாகங்களின் தலையீட்டினால் முன்பள்ளி சிறார்களின் உரிமைகள் பறிக்கப்படுவதாகவும் தமக்கு வழங்கப்படும் கொடுப்பனவை அதிகரிக்குமாறும், நிரந்தர நியமனம் வழங்குமாறும் கோரி, மலையக முன்பள்ளி ஆசிரியர்கள் நேற்று முன்தினம் ஹற்றன் ரயில் நிலையம் முன்பாக கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நீண்டகாலமாக கொடுப்பனவு அதிகரிக்கப்படாமை காரணமாக தாம் பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாக கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அத்துடன் தோட்ட நிர்வாகங்கள் முன்பள்ளிகளை நேரடியாக நிர்வகிப்பதன் காரணமாக, தோட்டப்புற மாணவர்களுக்கு முறையான ஆரம்பக் கல்வி வழங்குவதில் பாரிய பின்னடைவு ஏற்பட்டுள்ளதாகவும் போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

மேலும், முன்பள்ளிகளை நிர்வகிக்கும் உரிமையை தோட்ட நிர்வாகங்களுக்கு யார் வழங்கியது என கேள்வி எழுப்பிய அவர்கள், அரசின் கீழ் இயங்கும் மாகாண சபைகளே தோட்ட முன்பள்ளிகளை நிர்வகிக்கும் அதிகாரம் கொண்ட அமைப்புகள் எனவும் சுட்டிக்காட்டினர்.

ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்குத் தேவையான தகுதிகளைப் பெற்றிராத பிள்ளை பராமரிப்பாளர்கள் முன்பள்ளிகளை நடத்துவதால், பல முன்பள்ளிகள் மூடப்பட்டுள்ளதாகவும், இதனால் மாணவர்களின் ஆரம்பக் கல்வி பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் கவலை வெளியிட்டனர்.

எனவே, தமக்கு விரைவில் தீர்வு வழங்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் போராட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(எ)

# மண்சரிவு சிவப்பு அபாய எச்சரிக்கை நீக்கப்பட்டது

கொழும்பு, பெப். 24

நாட்டின் பல மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டிருந்த மண்சரிவுக்கான "சிவப்பு" (மட்டம் 3) அபாய எச்சரிக்கைகள் தற்போது நீக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தால் கண்டி மாவட்டத்தின் சில பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு மாத்திரமே தற்போது "சிவப்பு" எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது.

சோமாவதிய வீதி தவிர்ந்த ஏனைய அனைத்து பிரதான வீதிகளிலும் போக்குவரத்து வழமைக்குத் திரும்பியுள்ளது.

எந்தவொரு அவசர நிலைமையையும் கையாளுவதற்கு முப்படைகள், பொலிஸார் மற்றும் தொழில்நுட்பக் குழுவினர் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

பொதுமக்கள் மேலதிக தகவல்களுக்கு 117 என்ற அவசர தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொள்ள முடியும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள் ளது.

வானிலை மாற்றங்கள் குறித்து பொதுமக்கள் தொடர்ந்து அவதானத்துடன் இருக்குமாறும், உத்தியோகபூர்வ அறிவிப்புகளை பின்பற்றுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(எ)

# "சம்பள அதிகரிப்பையடுத்து கெடுபிடிகளும் அதிகரிப்பு"

நுவரெலியா, பெப். 24

"சம்பள அதிகரிப்பையடுத்து கெடுபிடிகளும் அதிகரித்துள்ளன"- இவ்வாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தோட்ட சபை தலைவர்களுக்கான விசேட கூட்டம் கொட்டகலை சிறீ முத்து விநாயகர் ஆலய பிரதான மண்டபத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.


இந்தக் கூட்டத்தில் ஜீவன் தொண்டமான் கருத்து தெரிவிக்கையில்,

"பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்கியதை நாங்கள் ஒருபோதும் எதிர்க்கவில்லை. ஆனால், வர்த்தமானியில் இதற்கான அறிவித்தலை வழங்க வேண்டும். பெருந்தோட்டப் பகுதியில் முன்னெடுக்கப்படும் வீடமைப்பு திட்டத்தின் தற்போதைய நிலைமை, அரசாங்கம் எவ்வாறான வேலைத் திட்டங்களை முன்னெடுக்கின்றது. அது எந்த அளவுக்கு மக்களுக்கு சாத்தியமாக இருக்கின்றது.

பெருந்தோட்ட நிறுவனங்கள் எவ்வாறு செயல்படுகின்றன. தற்போது சம்பளம் அதிகரிக்கப்பட்ட பின்னர் கெடுபிடிகள் அதிகரித்துள்ளன"- போன்ற விடயங்களை சுட்டிக்காட்டினார்.

(எ)

# அம்பாறையில் பாரிய கடலரிப்பு



கல்முனை, பெப். 24

அம்பாறை மாவட்டத்தில் நிலவும் அசாதாரண இயற்கை சூழல் காரணமாக பல இடங்கள் பாரிய கடலரிப்புக்கு உள்ளாகி வருகின்றன.

குறிப்பாக நிந்தவூரை அடுத்துள்ள அட்டப்பள்ளம் எனும் கிராமம் மிகவும் மோசமான கடல் அரிப்புக்கு இலக்காகி வருகிறது .

கடல் அருகில் இருந்த தென்னந்தோட்டங்களில் சுமார் 100இற்கும் அதிகமான தென்னைகளை கடல் உள்வாங்கியுள்ளது. சுமார் 100 மீற்றர் நிலப்பரப்பை கடலுக்குள் எடுத்துக் கொண்டிருக்கிறது.

அங்குள்ள மக்கள் தங்கள் குடிமனைகளும் கடலுக்குள் சென்று விடுமோ என்று தினம் தினம் அஞ்சி வாழ்ந்து வருகின்றனர்.

(எ)

# பேராதனை பல்கலை. கணினி அறை திறப்பு

கண்டி, பெப். 24

பேராதனை பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடத்தின் இரண்டு கணினி அறைகளும் கடந்த வெள்ள அனர்த்தத்தின் போது கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தன.

அவற்றில் ஒன்று புனரமைக்கப்பட்டு நேற்றுத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி பிரிவில் இருந்த அனைத்து கணினிகளும் பழுதடைந்த காரணத்தால் மாணவர்கள் பாரிய பிரச்னைகளுக்கு முகம் கொடுத்தனர்.

இதனை நிவர்த்தி செய்ய பிரபல தனியார் கணினி நிறுவனம் ஒன்று முன்வந்து 100 கணினிகளை இலவசமாக வழங்கியது.

மேற்படி கணினி கூட திறப்பு விழாவில் பல்கலைக்கழக துணைவேந்தர் ட்ரன்ஸ் மதுஜித் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதந்திர...

சம்பவங்கள் இடம்பெறாதிருக்க என்னென்ன முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன? போன்ற கேள்விகளுக்குப் பதிலளிக்கும் வகையில் விரிவான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு இம்மாதம் 11ஆம் திகதி பல்கலைக்கழக நிர்வாகத்தைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கேட்டிருந்தது.

இதனையடுத்துப் பல்கலைக்கழகத்தின் இன நல்லிணக்கப் பிரிவுக்குப் பொறுப்பான பேராசிரியர் ஒருவரையும், மாணவ ஒழுக்காற்று அதிகாரி ஒருவரையும், பிரதம பாதுகாப்பு அதிகாரியையும் உள்ளடக்கிய விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டு, அவ் விசாரணைக்குழுவின் அறிக்கை கடந்த வாரம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கப்பட்டது.

அதன் அடிப்படையிலும், சம்பவம் தொடர்பில் தேசிய புலனாய்வு முகவராண்மையினால் சமர்ப்பிக்கப்பட்ட வீடியோ மற்றும் புகைப்பட ஆதாரங்களின் அடிப்படையிலும் சம்பவத்துடன் நேரடியாகத் தொடர்புடைய இரண்டு மாணவர்கள் அடங்கலாக இரு மாணவிகள் மற்றும் 28 மாணவர்கள் மீதும் எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பில் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அடுத்த கூட்டத்தில் தீர்மானிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

இதேவேளை - யாழ். பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் முடிவில், சிறுபான்மைத் தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு மதிப்பளிக்கப்படாத வரையில் இலங்கையின் தேசிய நிகழ்வான சுதந்திர தினம், தமிழர்களுக்கு உகந்ததொரு நாள் இல்லை என்பதை வெளிப்படுத்துவதற்காகவே மேற்கொள்ளப்பட்டது என மாணவர்களின் மனநிலை காணப்பட்டதாகவும், நீண்ட நோக்கில் இனங்களுக்கிடையே பரஸ்பரம் நல்லுறவை மேம்படுத்தத்தக்க நிரந்தர புரிந்துணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வட்டாரங்களில் இருந்து அறியக்கிடைத்தது.

(அ-ஒ)

## மாகாண சபைத்...

அரசாங்கத்திற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் உள்ளதால், தேர்தலை நடத்துவதற்குத் தேவையான எந்தவொரு சட்டப் பின்னணியையும் இலகுவாக உருவாக்க முடியும். இதற்கு எதிர்க்கட்சி முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் எனவும் அவர் உறுதியளித்தார்.

மாகாண சபைகள் ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக தேர்தல்கள் இன்றி முடங்கியுள்ளன. இதனால் மாகாண பாடசாலைகள், சுகாதார சேவைகள் மற்றும் பொது மக்கள் சேவைகள் பாரிய பின்னடைவைச் சந்தித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

மாகாண சபைத் தேர்தல்களை நடத்தி, இந்த பிரச்னைகளைத் தீர்க்க அரசாங்கத்திற்கும் வலுவான பொறுப்பு இருப்பதாக ரஞ்சித் மத்துமபண்டார கூறினார்.

வரவிருக்கும் மாகாண சபைத் தேர்தல்களை ஆராயும் பாராளுமன்றத் தேர்வுக் குழுவில், இந்தத் தேர்தல்களை விரைவாக நடத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்று எதிர்க்கட்சி கோருகிறது.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் விஜித ஹேரத் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற விசேட குழுவின் முதலாவது கூட்டத்திலேயே இந்த யோசனை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

(அ)

## மிரட்டல்களால்...

அச்சுறுத்தல்கள் மூலம் அதனை மௌனிக்கச் செய்யக்கூடாது என நாமல் வலியுறுத்தியுள்ளார்.

இந்த நிலையில் பல தலைமுறை அனுபவத்தைக் கொண்ட பல்கலைக்கழகங்களில் நடத்தப்படவிருந்த பகிரங்க விவாதங்களில் உரையாற்ற தாம் மிகுந்த ஆவலாக இருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, தனது கருத்துக்களை கடுமையாக எதிர்ப்பவர்களுடன், நேரடி விவாதத்தை தாம் வரவேற்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

பகிரங்க உரையாடல்களில் மாத்திரமே அர்த்தமுள்ள, சமரச முன்னேற்றங்கள் வெளிப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்தகைய ஈடுபாட்டை மறுப்பது ஜனநாயகத்தை வலுப்படுத்தாது என அவர் மேலும் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும், ஒக்ஸ்போர்ட் மற்றும் கேம்ப்ரிஜ்ட் பல்கழைக்கழகங்களின் விவாத நிகழ்வுக்கு, தமக்கு அழைப்பு விடுக்கப்பட்டமைக்கு நன்றி தெரிவித்துள்ள நாமல் ராஜபக்ஷ, எதிர்காலத்தில் தமக்கு வாய்ப்பு கிடைக்கும் என நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (அ)

## பௌத்த...

அத்தே ஞானசார தேரர், பிக்குகள் என்பவர்கள் வெறும் தானத்தை மட்டும் பெற்றுக்கொண்டு அமைதியாக இருக்க வேண்டியவர்கள் அல்ல என்றும், நாட்டின் பாதுகாப்பிற்காக முன்வருவது பிக்குகளின் வரலாற்று ரீதியான கடமை என்றும் தெரிவித்தார்.

சோழர்கள், போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் மற்றும் ஆங்கிலேயர் போன்ற பலத்த ஆக்கிரமிப்பாளர்களால் கூட சிங்கள பிக்குகளின் வரலாற்றையோ அல்லது அவர்களின் செல்வாக்கையோ சிதைக்க முடியவில்லை என்பதை அவர் இதன்போது நினைவு கூர்ந்தார்.

நாட்டின் பாதுகாப்பும் பௌத்த மதமும் ஒன்றோடொன்று பிரிக்க முடியாத வகையில் பிணைக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட அவர், பிக்குகளுக்கு இடையே பிரிவினையை ஏற்படுத்த முன்னெடுக்கப்படும் முயற்சிகளையும் சாடினார். தற்போதைய அரசாங்கம் மாத்திரமன்றி, இதற்கு முன்னர் இருந்த அரசாங்கங்களின் காலத்திலும் பிக்குகளின் அரசியல் பங்களிப்பு இருந்ததை அவர் சுட்டிக்காட்டினார்.

தமது உரிமைகள் மற்றும் வரலாற்று ரீதியான வகிபாகத்தை உறுதிப்படுத்தும் வகையில், முன்னாள் நிதியமைச்சர் ஜே.ஆர். ஜயவர்தன மற்றும் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க ஆகியோரின் காலப்பகுதியில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஹன்சாட் அறிக்கைகளின் முக்கிய பகுதிகளை அவர் இதன்போது சான்றாக முன்வைத்தார்.

தமக்கு எதிராகப் பாரியளவில் அரசியல் வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளதாகவும், வெளிநாட்டுப் பயணக் கடவுச்சீட்டு முடக்கப்பட்டு நீதிமன்றத்தின் ஊடாகத் தமக்குள்ள அனைத்து வழிகளும் அடைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டினார். இதனால் உண்மைத் தகவல்களைச் சமூகத்திற்குக் கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் கவலை வெளியிட்டார்.

"எம்மை இனவாதிகள் என முத்திரை குத்தி எமது நற்பெயருக்குக் களங்கம் விளைவிப்பதை நிறுத்த வேண்டும். எம் மீது குற்றச்சாட்டுகள் இருந்தால் அவற்றுக்கு எதிராகச் சட்டப்படி நடவடிக்கை எடுங்கள், அதை விடுத்து இழிவான முறையில் அவதூறு பேசாதீர்கள்" என அவர் சவால் விடுத்தார்.

மேலும், தமக்கெதிரான சட்டப் போராட்டங்களை முன்னெடுப்பதற்கும் தற்போது தாம் தங்கியிருக்கும் விகாரையைப் புனரமைப்பதற்கும் போதிய நிதி வசதி இல்லை எனக் குறிப்பிட்ட அவர், இதற்காக "ஜாதிக பின்கெட" (தேசிய புண்ணியத் தராசு) எனும் பெயரில் வங்கி கணக்கொன்றை அறிமுகப்படுத்தினார். விருப்பமுள்ளவர்கள் 100 ரூபாவையேனும் அந்த கணக்கில் வைப்பிலிட்டு இந்த நீதிப் போராட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அவர் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்தார். (அ)

## வடக்கு...

பட்டியலில் காணப்பட்ட குறைபாடுகள் சீர்செய்யப்பட்டு புதிய பட்டியல் வெளியிடப்படவுள்ளது.

ஆசிரியர் சங்கங்களை உள்ளடக்கிய மேன்முறையீட்டுச் சபையூடாக மேன்முறையீட்டுச் செயற்பாடுகள் முழுமையாக நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், சேவையின் தேவை கருதிய திருத்தப்பட்ட புதிய பட்டியலும் (ஆசிரியர் சங்கங்களைத் தவிர்த்து) தயாரிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக, சேவையின் தேவை கருதிய திருத்தப்பட்ட இடமாற்றப் பட்டியல் இன்று எதிர்வரும் 25ஆம் திகதி மற்றும் 27ஆம் திகதி என மூன்று கட்டங்களாக இணையத்தளத்தில் வெளியிடப்படவுள்ளது.

அத்துடன், சேவையின் தேவை கருதிய ஆசிரியர் இடமாற்றக் கடிதங்கள் எதிர்வரும் மார்ச் மாதம் 5ஆம் திகதியும், வருடாந்த இடமாற்றத்துக்கு விண்ணப்பித்துத் தெரிவுசெய்யப்பட்ட ஆசிரியர்களுக்கான இடமாற்றக் கடிதங்கள் மார்ச் மாதம் 15ஆம் திகதியும் வழங்கி வைக்கப்படும் என வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வை.ஜெயச்சந்திரன் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, 2026ஆம் ஆண்டுக்கான இடமாற்றக் கோரிக்கைகளில், இடமாற்றச் சபையினூடாக 227 விண்ணப்பங்களும், மேன்முறையீட்டுச் சபையினூடாக 90 விண்ணப்பங்களும், காத்திருப்போர் பட்டியலூடாக 51 விண்ணப்பங்களுமாக மொத்தமாக 368 ஆசிரியர்க ளுக்கான இடமாற்றங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும், சேவையின் தேவை கருதி வழங்கப்படும் இடமாற்றம் தொடர்பில் அதிருப்தியடையும் ஆசிரியர்கள், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் கோவையின் ஒஓஆம் அத்தியாயத்துக்கமைய அந்தத் தீர்மானத்துக்கு எதிராக அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்ய முடியும் எனவும் அவர் மேலும் தெளிவுபடுத்தியுள்ளார்.

(அ)

## யாழில்...

அமர்த்தியதாகவும், அதற்காக 2 இலட்சத்து 23 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு வழங்கப்பட்டதாகவும் மாவட்ட செயலகம் தெரிவித்துள்ளது.

அதேவேளை ஜனவரி 16ஆம் திகதி "முழு நாடும் ஒன்றாக" போதை ஒழிப்பு நிகழ்வுக்காக கொக்குவில் தொழில்நுட்ப கல்லூரி மைதானத்திற்கு மக்களை அழைத்து வர இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான 75 பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்தியதாகவும் , அதற்காக 23 இலட்சத்து 43 ஆயிரத்து 885 ரூபாய் கொடுப்பனவு வழங்கியதாகவும் மாவட்ட செயலகம் தெரிவித்துள்ளது.

(அ)

## மண்டைதீவு...

இந்தத் திட்டம் தொடர்பான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு நடைமுறையின் ஒரு பகுதியாக, "திட்ட வரைபு அறிக்கை" ஒன்றை சிறீலங்கா கிரிக்கெட் நிறுவனத்துக்கு வழங்கியுள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் கபில மஹேஷ் ராஜபக்ஷ தெரிவித்தார்.

மைதானத்துக்காக ஒதுக்கப்பட்ட 48 ஏக்கர் காணி, பாதுகாக்கப்பட்ட வனப் பகுதிக்குள் வரவில்லை என்பதை வனப் பாதுகாப்புத் திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ளது.

இருப்பினும், முறையான சுற்றுச்சூழல் மதிப்பீட்டு அறிக்கையை சிறீலங்கா கிரிக்கெட் சமர்ப்பிக்கும் வரை பணிகளைத் தொடர முடியாது.

சுற்றுச்சூழல் அனுமதி பெறப்படுவதற்கு முன்னரே அங்கு நிலத்தை சமப்படுத்தும் பணிகள் நடைபெற்றுள்ளதாகக் கிடைத்த முறைப்பாடுகளையடுத்து, யாழ்ப்பாண அலுவலக அதிகாரிகள் சோதனைகளை மேற்கொண்டனர்.

1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றுச்சூழல் சட்டத்தின் கீழ், அனுமதி இன்றி இத்தகைய திட்டங்களை முன்னெடுப்பது சட்டவிரோதமாகும்.

இதன்படி, கடந்த பெப்ரவரி 18 ஆம் திகதி பணிகளை நிறுத்துமாறு சிறீலங்கா கிரிக்கெட் நிறுவனத்துக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்புச் சங்கம், இந்தத் திட்டம் கட்டாய சுற்றுச்சூழல் அனுமதியின்றி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் கூறி, அதனை உடனடியாக நிறுத்துமாறு அண்மையில் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

## கொழும்பு...

அதிகாரத்துஷ்பிரயோகம், அரச வளங்கள் மற்றும் சலுகைகளை தவறாகப் பயன்படுத்துதல், சட்டவிரோத ஆட்சேர்ப்பு மற்றும் நியமனங்கள், கொள்முதல் நடைமுறைகளை மீறுதல், அசையும் மற்றும் அசையா சொத்துக்களை குத்தகைக்கு எடுப்பதில் இடம்பெற்ற முறைகேடுகள் பற்றி ஆராய்வதற்கென நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவில் முறைப்பாடுகளைப் பதிவு செய்வதற்கான கால எல்லையே இவ்வாறு நீடிக்கப்பட்டுள்ளது.

எழுத்து மூலமாக முறைப்பாடுகளைச் சிங்களம், தமிழ் அல்லது ஆங்கில மொழியில் இல 152, காலி வீதி, கொழும்பு 03 என்ற முகவரியில் சமர்ப்பிக்கலாம். முறைப்பாட்டில், முறைப்பாட்டாளரின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் ஆகியவை குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும் என்றும், தங்கள் அடையாளத்தை வெளியிட விரும்பாதவர்கள் அதற்கான கோரிக்கையை முன்வைக்கலாம் என்றும் ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும், நேரடியாக முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்க விரும்பும் நிறுவனங்கள் அல்லது தனிநபர்கள் மார்ச் 16 ஆம் திகதிக்கு முன்னர் 011 2301735 என்ற தொலைபேசி ஊடாகத் தொடர்பு கொண்டு முறைப்பாடு பதிவு செய்வதற்கான நேரத்தை முன்னேற்பாடு செய்து கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-ஒ)

## மாடி வீட்டில்...

தவறி கீழே விழுந்து மயக்கமடைந்துள்ளார். பின்னர் நள்ளிரவு 12 மணிக்கு வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவேளை அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என வைத்தியர்கள் தெரிவித்தனர்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம் குமார் மேற்கொண்டார்.

(அ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# லண்டனில் நாமலின் உரைகள் ரத்து; இலங்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தும்!

### பொதுஜன பெரமுன சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 24

நாமல் ராஜபக்ஷவின் இங்கிலாந்து விஜயத்தின்போது ஆக்ஸ்போர்ட் மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்களில் திட்டமிடப்பட்டிருந்த உரைகள், அங்குள்ள தமிழ் மாணவர் அமைப்புகளின் அழுத்தம் காரணமாக ரத்து செய்யப்பட்டமையானது இலங்கைக்கு எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும் என முன்னாள் இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த தெரிவித்தார்.

பத்தரமுல்லயில் உள்ள பொதுஜன பெரமுன கட்சித் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட அவர்,

நாமல் ராஜபக்ஷ சவால்களுக்கு அஞ்சாத ஒரு இளைஞர், எதிர்ப்புகள் எழும் என்று தெரிந்தே அந்தத் தரப்பினருடன் கலந்துரையாடி அவர்களின் கருத்துக்களைக் கேட்டறியும் நோக்கில் அவர் அங்கு சென்றார்.

இத்தகைய எதிர்ப்புக்கள் எமது தரப்புக்கு புதியவை அல்ல, இதனை விமர்சிக்கும் "சுத்திகரிப்புப் படையினர்" முதலில் தங்களது அரசாங்கத்தின் தவறுகளைச் சரி செய்ய வேண்டும்.

ஊழலை ஒழிப்பதாகக் கூறி ஆட்சிக்கு வந்தவர்கள் இன்று அடிமட்டம் முதல் அமைச்சரவை வரை பாரிய ஊழல்களில் ஈடுபட்டுள்ளனர்.

அண்மையில் மீரிகம பிரதேச சபை தவிசாளர், மக்களுக்கு வழங்கப்படவேண்டிய நிவாரணப் பொருட்களைத் தனது அறையில் பதுக்கி வைத்திருந்தமை அம்பலமாகியுள்ளது. நாட்டில் இன்று தொழில்துறையினர் மற்றும் தொழில் வல்லுநர்கள் பாரிய அநீதிக்கு உள்ளாகியுள்ளனர்.

பழைய விநியோகஸ்தர்களை



நீக்கிவிட்டு அரசாங்கத்தின் நெருங்கிய சகாக்களுக்கு ஒப்பந்தங்கள் வழங்கப்படுவதால், தற்போது நிர்மாணிக்கப்படும் வீதிகள் தரமற்று உள்ளன.

தரம் குறைந்த நிலக்கரியை விலைக் குறைவு என்ற போர்வையில் இறக்கிக் கொண்டுவருவது மின் உற்பத்தி நிலையத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை அரசாங்கம் உணரவில்லை. இந்தத் தவறை மறைக்க முயல்வோர் எதிர்காலத்தில் சிறை செல்வதைத் தவிர்க்க முடியாது - என்றார். (அ)

## நாமலின் ஒக்ஸ்போர்ட் யூனியன் உரையும் ரத்து!

கொழும்பு, பெப். 24

பிரித்தானியாவின் ஒக்ஸ்போர்ட் யூனியனும், பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் உரை நிகழ்வை ரத்துச் செய்துள்ளது.

தமிழ் மாணவர் அமைப்புகள் மற்றும் பல்வேறு தரப்பினரின் எதிர்ப்புகளைத் தொடர்ந்து, ஒக்ஸ்போர்ட் யூனியன் இந்த முடிவை எடுத்துள்ளது.

திட்டமிடப்பட்ட போராட்டங்கள் தொடர்பான பாதுகாப்பு கவலைகளைக் காரணம் காட்டி, கேம்பிரிட்ஜ் யூனியன் முன்னதாக நாமல் ராஜபக்ஷவின் உரையை ரத்து செய்வதாக அறிவித்திருந்தது.

மாணவர்கள் சுதந்திரமாக பங்கேற்கும் திறன் குறித்து கவலைகள் எழுந்ததை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக ஒக்ஸ்போர்ட் யூனியன் தலைவர் சுத்தரின் யாங் தெரிவித்துள்ளார்.

நாமல் ராஜபக்ஷ தற்போது பிரித்தானியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

100ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் லண்டன் பௌத்த விஹாரையில் அவர் வழிபாடுகளை மேற்கொண்டார். (அ)

# திட்டமிட்ட குற்றக்குழுக்களால் அச்சுறுத்தல் நூற்றுக்கணக்கானோருக்கு அரச பாதுகாப்பு

கொழும்பு, பெப். 24

திட்டமிட்ட குற்றக் குழுவினரால் உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் சட்டத்தரணிகள், சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட நூற்றுக்கணக்கான தொழில் வல்லுநர்களின் பாதுகாப்பு நிலைமைகளை மதிப்பீடு செய்ய பொலிஸ் தலைமையகமும் பாதுகாப்பு அமைச்சும் நடவடிக்கை எடுத்துள்ளன.

பாதுகாப்பு அமைச்சின் அறிவுறுத்தலின் பேரில், அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள இவ்வாறான நபர்கள் தொடர்பில் அரச புலனாய்வுச் சேவையூடாக மதிப்பீட்டு அறிக்கைகள் கோரப்பட்டுள்ளதாக பாதுகாப்புத்துறை வட்டாரங்கள் தெரிவித்திருப்பதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

திட்டமிட்ட குற்றக் குழுவுடன் தொடர்புடைய சட்ட நடவடிக்கைகளில் ஈடுபடும் சில சட்டத்தரணிகளுக்கு, எதிர்த்தரப்பு கும்பல்களால் உயிர் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன.


அண்மையில், அக்குரெகொட பகுதியில் சட்டத்தரணி ஒருவரும் அவரது மனைவியும் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து, சட்டத்தரணிகள் சங்கம் இது குறித்து விரிவாக ஆராய்ந்துள்ளது.

திட்டமிட்ட குற்றக்குழுக் கைதிகள் சிறைச்சாலைக்குள் கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்துவதைத் தடுத்தல் உள்ளிட்ட சட்டவிரோத செயல்களுக்கு இடமளிக்காத காரணத்தினால், அதிகளவிலான சிறைச்சாலை அதிகாரிகள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளனர். இதனால் சிலர் தாமாகவே முன்வந்து இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர்.

சில முக்கிய மத குருமார்களும் தமக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதாகக் கூறி பாதுகாப்பு கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ்மா அதிபரிடம் முறைப்பாடு செய்துள்ள தரப்பினரின் பாதுகாப்பு நிலைமைகளை குழுவொன்றின் முன்னிலையில் சமர்ப்பித்து, உண்மையான அச்சுறுத்தல் இருப்பது உறுதி செய்யப்பட்டால் அவர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் எப்.யு.வுட்லர் தெரிவித்துள்ளார். (அ)

## சுன்னாகம் பொலிஸ் பொறுப்பதிகாரியாக நிதர்சன் கடமைகளைப் பொறுப்பேற்றார்



யாழ்ப்பாணம், பெப். 24

சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்ட சிவானந்தன் நிதர்சன் நேற்று கடமைகளைப் பொறுப்பேற்றார்.

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் பூசை வழிபாடுகளில் ஈடுபட்டதைத் தொடர்ந்து பொலிஸ் நிலையத்தில் மாலை அணிவித்து பொன்னாடை போர்த்தி வரவேற்பு அளிக்கப்பட்டது.

அதன் பின்னர் உத்தியோகபூர்வ ஆவணத்தில் அறிக்கையை எழுதிய சிவானந்தன் நிதர்சன் தனது பணிகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றார். (அ)

# ஊழலில் மூழ்கியுள்ளது திசைகாட்டி அரசாங்கம்

### பிரேம்நாத் சி.தொலவத்த குற்றச்சாட்டு



கொழும்பு, பெப். 24

திசைகாட்டி அரசாங்கம் ஊழலில் மூழ்கியுள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் சி. தொலவத்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுவிற்சர்லாந்து நிறுவனம் ஒன்றுக்கு எரிவாயு விலை மனுவை வழங்கியதில் முறைகேடு நடந்துள்ளது. இதனால் நாட்டில் எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன், டொலர் நெருக்கடியோ அல்லது கொவிட் பெருந்தொற்றோ இல்லாத தற்போதைய சூழலிலும் மக்கள் மீண்டும் வரிசைகளில் நிற்கும் அவலநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். ஒரு மில்லியன் மெற்றிக் தொன் நிலக்கரி விநியோகத்திற்கான விலைமனு விதிகளை மாற்றி, தரம் குறைந்த நிலக்கரியை இறக்குமதி செய்ததன் மூலம் பாரிய ஊழல் நடைபெற்றுள்ளது. இது மின்சார உற்பத்தியில் நேரடிப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

அரசாங்கத்தின் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் மகா சங்கத்தினரை பெயர் சொல்லி அழைத்து அவமதிக்கின்றனர்.

இது நாட்டின் மத நல்லிணக்கத்திற்கு விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தலாகும். இது குறித்து அரசாங்கம் மௌனம் காப்பது ஏன்?

அரச நிறுவனங்களின் உயர்மட்டம் முதல் கீழ்மட்டம் வரை அரசியல் தலையீடுகள் அதிகரித்துள்ளன. இதன் காரணமாக பல நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் அரச அதிகாரிகள் தமது பதவிகளை இராஜினாமா செய்து வருகின்றனர்.

நாட்டில் திட்டமிட்ட குற்றக் குழுவினரின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. கடந்த ஒரு வருடத்தில் மட்டும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் பலர் உயிரிழந்துள்ளனர். அதேபோல, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மற்றும் டொலரின் மதிப்பு உயர்வு போன்றவற்றால் மக்கள் துயரத்துக்கு ஆளாகியுள்ளனர்- என்றார். (அ)

# மின்சாரசபை மறுசீரமைப்பு திட்டத்துக்கு கடும் எதிர்ப்பு!

### ஓ.எல். பரீட்சை நிறைவடைந்த பின் பாரிய தொழிற்சங்க நடவடிக்கை

கொழும்பு, பெப். 24

இலங்கை மின்சார சபையை மறுசீரமைக்கும் அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து, க.பொ.த சாதாரண தரப் பரீட்சை நிறைவடைந்த பின்னர் பாரிய தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக மின்சார பொறியியலாளர் சங்கத்தின் தலைவர் கோசல அபேசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

புதிய திட்டத்தின் கீழ் 6 நிறுவனங்கள் உருவாக்கப்படவுள்ளன. அதன்படி, இந்த நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் அதிகாரிகளுக்காக மாத்திரம் மாதம் ஒன்றுக்கு 180 இலட்சம் ரூபா செலவிடப்படும். 15 இலட்சம் ரூபா செலவை "அதிகம்" எனக் கூறிவிட்டு, 180 இலட்சம் ரூபா செலவை ஏற்க அரசாங்கம் தயாராவது ஏன்? மின்சார சபையை இரத்து செய்வது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை எதிர்வரும் 28ஆம் திகதி வெளியிடுவதற்கு அமைச்சின் செயலாளர் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தத் திட்டத்தை அரசாங்கம் தன்னிச்சையாக முன்னெடுத்தால், சாதாரண தரப் பரீட்சை நிறைவடைந்தமையை தொடர்ந்து ஒட்டுமொத்த மின்சார சபை ஊழியர்களும் பாரிய வேலைநிறுத்தப் போராட் டத்தில் இறங்குவார்கள் என்றார். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 24.02.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.